**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 169 /2002**

Deposition of **<u>D.W.-3</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench clerk of this court, on 09.04.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.K. களியமூர்த்தி | Father Name | : கருப்பண்ணன் |
| Village | : கிழக்கு ராஜாபாளையம் | Taluk | : தலைவாசல் |
| Calling | : கிராம நிர்வாக அலுவலர் | Age | : 43 |

துவக்க நேரம் : 11.42 A.M.

சாட்சி முன்னிலையானார், உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதிகள் தரப்பில் முதல் விசாரணை</u> :

1) எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்துள்ளது. ச.எண்.267/4-ன் பழைய சர்வே எண். 151/1 ஆகும். இந்த சர்வே எண் சித்ரா பெயரில் உள்ளது. இந்த சர்வே எண்ணில் உள்ள விஸ்தீரணம் 952-1/2 சதுரடி ஆகும். சித்ரா பெயருக்கு முன்பாக மேற்கண்ட சர்வே எண் துரைசாமி என்பவர் பெயரில் பதிவாகியிருந்தது. அழைப்பாணை பெற்றபின் நான் மேற்படி சர்வே எண் உள்ள இடத்திற்கு சென்று அளவீடு செய்தேன். சித்ரா பெயரில் உள்ள சர்வே எண்ணில் UDR-படி அளந்து பார்த்து அதன் அளவுகள் பின்வருமாறு இருந்தன:-

| | | |
|---|---|---|
| வடபுறம் | - | கிழமேலாக 8.1 மீ, |
| தென்புறம் | - | கிழமேல் 8 மீ, |
| கிழபுறம் | - | தென்வடலாக 11 மீ, |
| மேற்கில் | - | தென்வடலாக 11 மீ ஆகும். |

2) சித்ரா பெயருக்கு கிரையம் செய்த துரைசாமி என்பவருக்கு எந்த ஆண்டு நத்தம் பட்டா வழங்கப்பட்டது என்றால் அது தெரியவில்லை. ஆனால், இந்த நத்தம்

செட்டில்மெண்ட் பதிவேடு கடந்த 1992-1993-ல் தயாரிக்கப்பட்டுள்ளது. கடந்த 1992-1993-லிருந்து இன்றுவரை நான் சொன்ன அளவில்தான் விஸ்தீரணம் உள்ளது என்றால் சரிதான். நத்தம் பட்டாவில் குறிப்பிட்டுள்ள அளவீட்டிற்கு அதிகமாக சித்ரா என்பவர் வீடு கட்டியுள்ளாரா என்றால் இல்லை.

3) வாதி கதிர்வேல் என்பவரின் வீடு சித்ரா வீட்டிற்கு எந்த திசையில் உள்ளது என்றால் மேற்கு திசையில் உள்ளது. வாதி கதிர்வேலின் வீட்டு சர்வே எண் என்னவென்றால் ச.எண்.267/3 ஆகும். இதற்கு பழைய கிராம நத்தம் சர்வே எண் என்னவென்றால் ச.எண்.151/1 ஆகும். கிழக்கு ராஜாபாளையம் கிராமத்தின் அனைத்து நிலங்களும் கிராம நத்தம் சர்வே எண்.151/1-க்குட்பட்டது என்றால் சரிதான்.

4) வாதி கதிர்வேலுக்கு சொந்தமான ச.எண்.267/3-ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 175 ச.மீ ஆகும். கதிர்வேல் பெயருக்கு வழங்கப்பட்டுள்ள பட்டாவில் நாற்புறமும் எவ்வளவு விஸ்தீரணம் என்று சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியும். அளவுகள் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| வடபுறம் | - | கிழமேலாக 11.6 மீ, |
| தென்புறம் | - | கிழமேல் 15 மீ, |
| கிழபுறம் | - | தென்வடலாக 11 மீ, மீண்டும் கிழக்கு நோக்கி திரும்பி 4.6 மீ நீண்டு, பின்னிட்டு தென்புறம் 3.8 மீ அளவில் நீண்டுள்ளது. |
| மேற்கில் | - | தென்வடலாக 14.5 மீ ஆகும். |

5) வடபுறம் கிழமேல் 11.6 மீ என்பது 38 அடி ஆகும். கதிர்வேல் பெயரில் உள்ள பட்டா உள்ள இடத்தில் யார் யார் குடியிருந்து வருகிறார்கள் என்றால் கதிர்வேலும், வேலாயுதம் ஆகும். சித்ரா வீட்டிற்கு மேற்குபுறத்தில் யார் குடியிருந்து வருகிறார்கள் என்றால் வேலாயுதம் குடியிருந்து வருகிறார். கதிர்வேல் எங்கு குடியிருந்து வருகிறார் என்றால் வேலாயுதம் வீட்டிற்கு மேற்குபுறத்தில் குடியிருந்து வருகிறார். சித்ரா வீட்டிற்கும், வேலாயுதம் வீட்டிற்கும் இடையில் என்ன உள்ளது என்றால் கழிவுநீர் செல்லும் சந்து

உள்ளது. அதுபோல் கதிர்வேல் வீட்டிற்கும், வேலாயுதம் வீட்டிற்கும் இடையில் என்ன உள்ளது என்றால் கழிவுநீர் செல்லும் சந்து மட்டும் உள்ளது.

6) என்னிடம் காட்டப்படும் நத்தம் பட்டா (பி.வா.த.சா.ஆ.14) வருவாய்த்துறை அலுவலகத்தில்தான் வழங்கப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் பட்டாக்கள் (பி.வா.த.ஆ.1, 2 ) எங்களது வருவாய்த்துறை அலுவலகத்தில் வழங்கப்பட்டுள்ளன என்றால் சரிதான். மேற்கண்ட 3 பட்டாக்களுக்கும் உரிய நத்தம் நிலவரித்திட்ட தூய அடங்கல் பதிவேடு **(Ex.X1),** நத்தம் நிலவரித்திட்ட தூய சிட்டா **(Ex.X2),** நத்தம் புல எண்.267-க்கான புலவரைப்படம் **(Ex.X3)** தாக்கல் செய்கிறேன். இதனை குறியீடு செய்ய வேண்டுகிறேன். நத்தம் பட்டாவில் (பி.வா.த.சா.ஆ.14) வடபுறம் காலியிடம் என்று குறிப்பிடப்பட்டுள்ள இடம் தற்பொழுது என்னவாக உள்ளது என்றால் தெருவாக உள்ளது.

மேற்படி ஆவணங்களை பரிசீலிக்க வேண்டி, குறுக்கு விசாரணை ஒத்திவைக்க வேண்டப்பட்டது, வேண்டுகோள் ஏற்கப்பட்டு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 12.17 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-S.Munusamy
Principal District Munsif, Attur

Typed by Selvi. C. Sasikala - O.S. No.169/2002, Dt.09.04.2025.